# பொறுமையாகக் காத்திருத்தல்

**மழை விடாமல்பெய்து ஓய்ந்தபின் வெளியில் சேறும், சகதியுமாக இருக்குமல்லவா? அப்போது வெளியில் சென்று விளையாடினால் மழைக் காய்ச்சல் வரும் என்று வெளியே விடமாட்டார்களல்லவா? ஆனால், 'எப்போது வெளியே போகலாம்' என்று ஆசையாக இருக்குமல்லவா? நோவாவின் குடும்பத்தாரும் வெளியே செல்ல ஆவலாயிருந்தார்கள்.**

நோவாவின் குடும்பத்தாரும், உயிர்ப்பிராணிகள் யாவும் பேழைக்குள் சென்று அவரவருக்குரிய இடத்தில் இருந்தார்கள். தேவன் பேழையின் கதவை அடைத்தார். 7 நாட்களாகியும் மழை வரவேயில்லை. தேவன் சொன்னபடியே நடக்கும் என்று காத்திருந்தனர். நோவாவின் குடும்பத்தார் மனதில் நினைத்ததற்கும் மேலாகவே நடந்தது. "அந்நாளிலே மகா ஆழத்தின் ஊற்றுக்கண்கள் எல்லாமே பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன."



தொடர்ந்து இப்படியே மழை பெய்துகொண்டேயிருந்தால் யானைகளுக்குக் கடல் காய்ச்சல் வரும் என்று தேவனுக்கு நன்கு தெரியும். ஆனால், நோவாவின் குடும்பத்தார் எவருக்குமே இது தெரியாது. இதுவரையிலும் யானையை எவரும் இவ்வாறு பேழையில் ஏற்றியது இல்லை. மிருகங்கள் யாவும் ஒழுங்காகச் சாப்பிட்டன. அவை சாப்பிட்டு முடித்தவுடன் இடம் நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டது. அப்போது கழிவுகளும் உடனே உடனே அகற்றப்பட்டன. எனவே, எந்த விதமான நாற்றமும் பேழையில் இல்லை.

பேழைக்குள்ளே இருந்த நோவாவின் குடும்பத்தார் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், மிருகங்கள் எந்த விதமான தொந்தரவும் தராமல் அமைதியாக இருந்தன. அவை உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் ஒரு குறையும் இல்லாதிருந்தது.

## மனன வசனம்

**நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**

**கலாத்தியர் 6:9.**

வெள்ளத்தின் மத்தியிலும் நோவாவின் குடும்பத்தினரை தேவன் பத்திரமாகப் பாதுகாப்பதாக வாக்களித்திருந்தார். தாம் சொன்னபடியே தேவன் செய்தார். பேழையினுடைய கதவை தேவனே மூடினார். வெள்ளம் பேழைக்குள் நுழைந்துவிடாமலும் பேழைக்கு மேலாகத் தண்ணீர் சென்று பேழையை மூடிவிடாமலும் தேவன் காத்தார். பேழை தண்ணீருக்கு அடியில் ஆழந்துவிடாதபடிக்கும் தேவன் காத்தருளினார்.

40 நாட்களாகப் பூமியில் மழை விடாமல் பெய்தது. இத்தனை பெரிய ஆபத்துக்கும் மத்தியில் தேவன் தங்களை அற்புதமாகக் காப்பதை எண்ணிய நோவாவின் குடும்பத்தினர் தேவனைத் துதித்தார்கள். மழை நின்ற பின்னும் பேழைக்குள்தான் நோவாவின் குடும்பத்தினர் இருந்தனர். நீரை வற்றப்பண்ண பூமியின்மேல் காற்றை வீசப் பண்ணினார் தேவன். பின்னர் அந்தப் பேழையை 'அரராத்' என்னும் மலையில் பத்திரமாகத் தங்கச்செய்தார். பெரிய காற்றை வீசப்பண்ணுவதின்மூலம் பூமியைத் தேவன் காயப்பண்ணினார்.

எட்டுமாதங்களாக நோவாவின் குடும்பத்தினர் பேழையினுள்ளே இருந்தார்கள். உள்ளேயே இருந்ததாலும் மிருகங்களுக்குத் தேவையானவற்றைக் குறைவின்றி ஓடி ஓடி கொடுத்துக் கவனித்ததாலும் நோவாவின் குடும்பத்தார் சற்றே சோர்வாகி இருந்தார்கள். ஆனாலும், வேலை செய்துகொண்டும், மிருகங்களை அன்புடன் கவனித்துக் கொண்டும்தான் இருந்தார்கள். 'எப்போது வெளியே போக முடியும்?' என்று ஒருவருக்கொருவர் கேட்டிருப்பார்கள். 'தேவன் நமக்குச் சொல்லுவார்' என்று நோவா அவர்களிடம் கூறியிருப்பார்.

நோவா ஜன்னலைத் திறந்து ஒரு காகத்தை வெளியே பறக்க விட்டார். அது பூமியில் தண்ணீர் நன்கு வற்றிப்போகும் மட்டும்



## செய்தி

***தேவனுடைய குடும்பத்தின் பிள்ளைகள் யாவருமே தேவனுக்காகக் காத்திருப்பார்கள்.***

வெளியே போவதும் பேழையினுள் வருவதுமாக இருந்தது. எனவே, ஒரு புறாவை இப்போது நோவா வெளியே பறக்க விட்டார். புறா தனது உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடமில்லாமல் மீண்டும் பேழைக்குள்ளேயே வந்தது. புறாவைப் பிடித்து பேழைக்குள்ளே வைத்துக் கொண்டார். புறாவை மீண்டும் வெளியே விட்டார். புறா தன் வாயிலே ஒலிவமரத்தின் இலையைக் கொண்டு வந்தது. அதினாலே பூமியின்மேல் ஜலம் குறைந்துவிட்டதென நோவா அறிந்தார்.

பேழையின் கதவைத் தேவன் திறக்கும் வரையிலும் நோவாவின் குடும்பத்தினர் பொறுமையாகக் காத்திருந்தனர். ஆனாலும், மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

என் அன்பே, நோவாவின் குடும்பத்தினர் போல நாமும் தேவனுக்காகக் காத்திருக்கப் பழகவேண்டும்.

### செய்முறை

*இன்றைய பாடத்தை நன்கு படி. மாறிக்கிடக்கும் படங்களை முறையாக வரிசைப் படுத்தி, வட்டத்தில் முறையாக எண்களை எழுதுக.*

